செ.வெ.எண் : 287 நாள் : 15-05-2012

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பிரபல இசைப்பாளர் திரு. எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்களின் மனைவி திருமதி ஜானகி அவர்கள் 14.5.2012 அன்று காலமானதையடுத்து, திரு. எம்.எஸ்.விஸ்வாநன் அவர்களுக்கு அனுப்பிய இரங்கல் கடிதத்தின் விவரம் பின்வருமாறு:-

"தங்களின் அன்பு மனைவி திருமதி ஜானகி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 14.5.2012 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மனவேதனையும் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தினால் ஈடு செய்ய முடியாத இழப்பு தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் ஏற்பட்டுள்ள போதிலும், இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், தைரியத்தையும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தைச் சார்ந்த அனைவருக்கும் அளிக்க வேண்டும் என்று நான் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

திருமதி ஜானகி அவர்களை இழந்து வாடும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9

நாள்: 15.5.2012